## இலங்கையின் ஆட்சியியல் பற்றிய சிவில் சமூக பகுப்பாய்வு அறிக்கை

- தற்காலிக தீர்வுகளுக்கு அப்பால் நாட்டின் உண்மையான முறைமைசார் (System Change) மாற்றத்துக்கு அவசியமான ஊழலுக்கு எதிரான மற்றும் ஆட்சியியலில் இடம்பெறவேண்டிய சீர்திருத்தங்கள் தொடர்பான விரிவான அறிக்கை.
- மிகவும் நுட்பமான ஆய்வின் பின்னர் முன்வைக்கப்பட்டுள்ள இந்த அறிக்கையினூடாக இலங்கையின் பொருளாதார நெருக்கடிக்கான காரணங்களை கண்டறிந்து, நாட்டின் ஆட்சியை சரியான திசையில் வழிநடத்த 34 முக்கிய பரிந்துரைகள் முன்வைக்கப்பட்டுள்ளன.
- இலங்கையில் முதன்முறையாக சிவில் சமூகத்தின் தலையீட்டுடன் தயாரிக்கப்பட்ட பகுப்பாய்வு அறிக்கையானது நாட்டில் ஊழலைக் கட்டுப்படுத்துவதற்கு பிரதானமாக கவனிக்கப்பட வேண்டிய விடயங்களை அடையாளம் கண்டுள்ளது.
- பொருளாதாரத்தை மீள கட்டியெழுப்பும் முயற்சிகள் சாத்தியமாக வேண்டுமானால் இச்சீர்திருத்தங்கள் அவசியம் என்பதை அறிக்கை சுட்டிக்காட்டுகின்றது.

இந்த பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துவதற்கு அரசாங்கத்திற்கு அழுத்தம் கொடுக்க சகல தரப்பினரது ஆதரவு மற்றும் பொதுமக்களின் ஆதரவு முக்கியமானது.

**ஊடனடியாக நடைமுறைப்படுத்த வேண்டிய பரிந்துரைகள் (6 மாதகாலத்திற்குள்)**

### தற்போதைய முறைமைகளின் வெளிப்படைத் தன்மை மற்றும் பொறுப்புக் கூறல் ஆகியவற்றை மேம்படுத்துவதற்கான நடைமுறைகள்

1. வரிவிலக்குடன் தொடர்புடைய சகல தகவல்களையும் வெளிப்படுத்துகின்ற நிதிசார் வெளிப்படைதன்மை கொண்ட தளம் ஒன்றை பேணுதல்.
2. அங்கீகரிக்கப்பட்ட வரவுசெலவுத்திட்டம் தொடர்பான கடந்த வருடத்திற்கான செலவு வேறுபாடுகளையும் அது தொடர்பான விளக்கங்களையும் உள்ளடக்கிய வருடாந்த அறிக்கையை ஒவ்வொரு வருடமும் மார்ச் 31 ஆம் திகதியளவில் வெளியிடல்.
3. மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 0.1% வருடாந்த வருமான இழப்பு ஏற்பட்டிருப்பின் வருமான மாற்றங்களில் ஏற்பட்ட விபரங்களை உள்ளடக்கி வருமான அறிக்கையொன்றினை காலாண்டுக்கு ஒருமுறை வெளியிடல்.
4. கணக்காய்வாளர் நாயகத்தின் பரிந்துரைகளை தேர்வுசெய்யப்பட்ட கருத்துக்களை ஒழுங்கமைப்பதற்காக மேற்கொள்ளப்பட்ட பின்னூட்டல் நடவடிக்கைகளை வெளியிடல்.
5. நிதிமுகாமைத்துவ (பொறுப்பு) சட்டத்தின், (FMRA) சகல ஏற்பாடுகளையும் நடைமுறைப்படுத்துவதோடு பொருத்தமான முறையில் மீளாய்வு செய்து அவை மீறப்படும் பட்சத்தில் தண்டனைகள் வழங்கப்படுவதை உறுதி செய்தல்.
6. தேசிய வரவுசெலவுத்திட்ட திணைக்களத்தின் (தற்துணிவு செலவினம்) மொத்த செலவில் அபிவிருத்தி செயற்பாடுகளின் கீழ் வரவுசெலவுத்திட்ட ஒதுக்கீடுகளை 3%க்கு மட்டுப்படுத்துதல்.
7. வெளிப்படையான மற்றும் பொறுப்புக்கூறல் முறைகளை நடைமுறைப்படுத்துவதன் மூலம் அரசியல் தலைவர்கள் மற்றும் சிரேஷ்ட அரச அதிகாரிகள் ஆகியோருக்கு வழங்கப்படுகின்ற சலுகைகளினால் ஏற்படக்கூடிய ஊழல் மற்றும் வீண் விரயம் ஆகியவற்றை குறைத்தல்.
8. அரசசேவைகள் அரசியல் மயப்படுவது தொடர்பானவை: பகிரங்க பொது கலந்துரையாடல் மூலம் அமைச்சின் செயலாளர்கள் மற்றும் ஏனைய மதிப்பீடுகள், பதவி உயர்வு நெறிமுறைகள் ஆகியவற்றை தாபிப்பதுடன் இத்தகைய நெறிமுறைகளை 06 மாதகாலப்பகுதியினுள் சீராக நடைமுறைப்படுத்தல்.
9. ஊழியர் சேமலாப நிதியத்தின் (EPF) சகல விதமான இரண்டாம் நிலை சந்தை கொடுக்கல்வாங்கல் தொடர்பான தரவுகளை அவற்றின் விற்பனை மற்றும் கொள்வனவு தொடர்பான சந்தை விலைகளை மதிப்பிடுவதற்கு போதிய தகவல்களை உள்ளடக்கி வெளியிடல் (2019 இல் வெளியிடப்பட்ட ஊழியர் சேமலாப நிதி கணக்காய்வாளர்களினால் பகுப்பாய்வு செய்யப்பட்டதன் பிரகாரம்)
10. தகவல் அறியும் சட்டத்தில் குறிப்பிடப்பட்டதன் பிரகாரம் கருத்திட்டங்கள் ஆரம்பிப்பதற்கு 03 மாதங்களுக்கு முன்னர் அவற்றுடன் தொடர்புடைய தகவல்களை உரியமுறையில் வெளியிடல்.
11. பொதுக்கடன் தொடர்பான இற்றைப்படுத்தப்பட்ட தகவல்களை முழுமையாக உள்ளடக்கிய காலாண்டு இதழ் ஒன்றை வெளியிடல்.
12. மொத்தமாக 100 மில்லியனுக்கு அதிகமான பொதுக்கொள்முதல் ஒப்பந்தங்கள் தொடர்பான விநியோகஸ்தர்கள் பற்றிய தகவல்களை வெளியிடக்கூடிய இணையத்தளம் ஒன்றை பேணுதல்.
13. சொத்து பிரகடனங்கள் தொடர்பில் பொதுமக்கள் அனுகிபெற்றுக்கொள்ளக்கூடிய விதத்தல் ஊழலுக்கு எதிரான சட்டம் தொடர்பான சட்ட கட்டமைப்பு பக்கச்சார்பின்றி நடைமுறைப்படுத்தப்படுவதை உறுதிசெய்தல்.
14. அரசியலமைப்பு ரீதியாக நிர்ணயிக்கப்பட்ட காலவரையறையினுள் தேசிய தேர்தல்களை நடாத்துதல்.
15. மின்னியல் முறையொன்றை தாபிப்பதன் மூலம் தேர்தல் பிரச்சார செலவு கண்காணிப்பு குற்றங்கள் தொடர்பான சட்டமுறை நடைமுறைப்படுத்தப்படுவதை உறுதிசெய்தல்.
16. இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவானது விசாரணை நடவடிக்கைகள் உட்பட சட்டத்தை வினைத்திறன்மிக்க முறையிலும் சமத்துவமாகவும் பிரயோகிக்க தயாராக இருப்பதை உறுதி செய்தல்.

17. சகல விதமான பாரிய அளவிலான உட்கட்டமைப்பு திட்டங்கள் தொடர்பான சுற்றாடல் தாக்க மதிப்பீடுகள் பற்றிய ஆவணங்களின் வெளிப்படைத்தன்மையை உறுதிப்படுத்துவதற்காக ஒன்லைன் மூலம் அவற்றை வெளியிடுவதை உறுதி செய்தல்.

18. ஜனநாயக ரீதியான மாற்றுக் கருத்துக்கள் மற்றும் ஆட்சேபனைகள் உள்ளடங்கலாக ஆளுகையுடன் தொடர்புடைய சகல விதமான பொருத்தமான அம்சங்கள் தொடர்பில் பொதுமக்களது பங்குபற்றுதலுக்கான வாய்ப்புகளை பேணி பாதுகாத்தல்.

குறுகிய காலத்திற்குள் நடைமுறைப்படுத்த வேண்டியவை (ஓராண்டிற்குள்):

## அரசியல் பொருளாதார ஸ்திரத்தன்மை மற்றும் நிலைபேறு தன்மை ஆகியவற்றை மேம்படுத்துவதற்கான நடைமுறைகள்

19. அங்கீகரிக்கப்பட்ட எவ்வித திட்டங்களுமின்றி வரிவிதிப்பில் மாற்றங்களை மேற்கொள்வதற்கு தற்துணிபை அதிகப்படியாக பயன்படுத்திக்கொள்வதற்கு காணப்படும் வாய்ப்பினை அகற்றும் பொருட்டு அனைத்து வரிதொடர்பான சட்டங்களையும் திருத்துதல்.

20. இலங்கை கையொப்பமிட்டுள்ள புகையிலைக் கட்டுப்பாடு தொடர்பான சட்டவாக்க (உறுப்புரை 06) சமவாயத்தில், எதிர்பார்க்கப்பட்ட விலை மற்றும் வரி தொடர்பான நடைமுறைகளை முழுமையாக நடைமுறைப்படுத்தல்.

21. வரிவிலக்களித்தலில், வருடாந்த குறைப்பான 10%இனை 05 வருட சராசரி காலத்தினுள் அடைதல்.

22. மத்தியவங்கிக்கு புறம்பாக பொதுக்கடன் முகாமைத்துவ அலுவலகமொன்றினை தாபித்தல்.

23. பொதுக்கொள்முதல் மீதான சிறந்த மேற்பார்வையை மேற்கொள்ளக்கூடிய வகையில் தேசிய கொள்முதல் ஆணைக்குழுவை வலுப்படுத்துதல் மற்றும் 2019 ஆம் ஆண்டின் கொள்முதல் வழிகாட்டுதல் விதிமுறையை பொதுமக்கள் ஆலோசனையுடன் நிறைவேற்றுதல்.

24. பில்லியன் ரூபாய்க்கு மேல் கொள்முதல் செய்கின்ற மற்றும் போட்டித் தன்மைமிக்க விலை கோரல் தொடர்பான ஆகக் குறைந்த விகிதத்தை கொண்ட 10 இராஜாங்க அமைச்சுகள், நிறுவனங்கள் தொடர்பான விசேட கணக்காய்வுகளை மேற்கொள்ளல்.

25. பொதுமக்கள் அணுகக்கூடிய விதத்தில் ஒன்லைன் மூலமாக விருப்புச் சார்பான முரண்பாட்டுப் (Conflict of Interest) பதிவேடொன்றை தாபித்தல் அல்லது நிறுவுதல்.

26. அரசதொழில் முயற்சிகள் அல்லது நிறுவனங்கள் வெளிப்படையான மற்றும் பொறுப்புக்கூறலுடன் கூடிய முகாமைத்துவத்தை மேற்கொள்ளும் வகையிலான சட்டவிதிமுறைகளை இயற்றுதல் அல்லது உருவாக்குதல்.

27. ஒவ்வொரு முறையும் பாராளுமன்ற கூட்டத்தொடர் ஒத்திவைக்கப்படுகின்ற பொழுது பொதுக்கணக்குகள் பற்றிய குழு, அரச தொழில் முயற்சிகள் பற்றிய குழு, அரசாங்க நிதி பற்றிய குழு ஆகியவற்றின் செயற்பாடுகள் தடைப்படாத விதத்தில் அவற்றின் தொடர் செயற்பாடும் பொறுப்புக்கூறலும் சிறப்பாக மேற்கொள்ளக்கூடிய விதத்தில் பாராளுமன்ற நிலையியற் கட்டளைகளை திருத்துதல்.

28. இலங்கையின் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் இராணுவமயமாக்கலை குறைத்தல், இராணுவத்தினரில், புதிய திறன்களை வளர்த்தல் மற்றும் தனியார் மற்றும் பொதுவான அரசகாணிகளை மீண்டும் கையளித்தல் உள்ளடங்கலாக தேவையற்ற இராணுவ செலவினத்தை குறைத்தல்.

29. புதிய சமூக பாதுகாப்பு வலையமைப்பு பணமாற்றமுறைமையின் வெளிப்படைத்தன்மை மற்றும் பொறுப்புக்கூறலை அதிகரித்தல்.

30. சட்டவிரோதமான நிதிப் பரிமாற்றங்கள் (IFFs) தொடர்புடைய முறையான மேற்பார்வை மற்றும் நடைமுறைப்படுத்தல் ஆகியவற்றை உறுதி செய்தல்.

மத்தியகால தவணையில் (இரண்டு ஆண்டுகளுக்குள்):

## முறைமைசார் மாற்றத்துக்கான நடவடிக்கைகள் System Change

31. ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்ட ஊழல் அல்லது துஷ்பிரயோகம் தொடர்பான வழக்குகளின் முன்னேற்றத்தை உறுதிப்படுத்தும் முகமாக StAR இன் தொழில்நுட்ப உதவியுடன் (திருடப்பட்ட சொத்துக்களை மீட்டெடுப்பதற்கான முன்னெடுப்பு) பரந்தளவிலான கலந்தாராய்வுகளுடன் கூடிய முறையில் துஷ்பிரயோகத்திற்கு எதிரான ஐக்கிய நாடுகள் சமவாயத்திற்கு ஏற்ப சொத்து மீட்டெடுத்தல் தொடர்பான சட்டங்களை இயற்றுதல்.

32. ஏனைய நாடுகளில் தாபிக்கப்பட்டுள்ள அதிகாரிகளுக்கு ஆலோசனை வழங்குதலை அடிப்படையாகக் கொண்டு சர்வதேச நாணய நிதியத்தின் தொழில்நுட்ப வழிகாட்டிகளுடன் கூடிய விசேட சுயாதீன துஷ்பிரயோக சட்ட நடவடிக்கை அலுவலகம் ஒன்றினை தாபித்தல்.

33. மலையக தமிழ் பிரதேசங்களில் பயன்படுத்துபவருக்கு சொந்தமான விதத்தில் வீடமைப்பு காணிகளை ஒதுக்குவதுடன் பெருந்தோட்ட தொழிலாளர்களுக்கு வாழ்வதற்கு ஏற்ற விதத்தில் சம்பளத்தை வழங்குதல் (வீட்டிற்கும் வாழ்வாதாரத்திற்குமான உரிமைகள்)

34. அரசியல் சாராத பிரதிநிதிகள் அதிக அளவில் பங்குபற்றக்கூடிய விதத்தில் அரசியலமைப்பு சபையின் ஆக்க அமைவு மற்றும் கட்டமைப்பு ஆகியவற்றை மாற்றுதல்.